## நரம்பு சுருட்டு நோய்க்கு

# கே.எம்.சி.எச்-ல் அதி நவீன சிகிச்சை



வெங்கடேஷ்

**கோவை, அக்.12:** கால்களில் நரம்பு சுருட்டு பாதிப்பு என்பது பொதுவாக பலருக்கு காணப்படும் நோய்களில் ஒன்றாகும். இந்த நோயானது அதிக நேரம் தொடர்ந்து நின்று கொண்டு இருப்பவர்கள், அதிக எடை கொண்டவர்கள் மற்றும் குழந்தைகளை பெற்ற பின்பு பெண்களுக்கும் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. பரம்பரையாகவும் இந்த நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

இந்நோயைப் பற்றி கே.எம்.சி.எச். மருத்துவமனையின் கதிரியக்கத்துறை (ரேடியாலஜிஸ்ட்) மருத்துவர் டாக்டர்.வெங்கடேஷ் கூறியதாவது:

உடலில் தோலுக்கு அடியில் செல்லும் அசுத்த ரத்தத்தை கொண்டு செல்லும் ரத்தக்குழாய்களில் பிரச்னைகள் ஏற்படும்பொழுது நரம்பு சுருட்டு நோய் காணப்படுகின்றது. இந்நோய் பொதுவாக காலில் காணப்படும் வியாதியாகும். தோலில் உள்ள ரத்தக்குழாய் புடைத்து இருத்தல், தோலின் நிறம் மாறுதல், கால் வலி, கால் வீக்கம், கால் அரிப்பு போன்றவை இந்நோயின் அறிகுறிகளாகும். இந்நோயை ஆரம்ப நிலைகளிலேயே சரி செய்யத்தவறினால் காலில் இருந்து ரத்தப் போக்கு மற்றும் கால்களில் ஆறுவதற்கு கடினமான புண்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இதுவரை இந்நோயிற்கு அறுவை சிகிச்சை மூலமாகவோ, லேசர் சிகிச்சை மூலமாகவோ தீர்வு காணப்பட்டு வருகிறது. தற்போது, கே.எம்.சி.எச்-ல் நவீன சிகிச்சை முறையாக நுண்துளை அறுவை சிகிச்சை (பின்ஹோல் சர்ஜரி) மூலம் இந்நோய் குணப்படுத்தப்படுகிறது.

இந்த நுண்துளை அறுவை சிகிச்சை என்பது ஒரு சிறிய துளை மூலம் பாதிக்கப்பட்ட ரத்தக்குழாய்க்குள் அதிர்வலையை உருவாக்கும் மெலிதான கருவியை (ரேடியோ பிரிக்வன்சி அப்லேசன் டிவைஸ்) செலுத்தி இதன் மூலம் உண்டாகும் வெப்பநிலையில் ரத்தக்குழாயில் ஏற்பட்டு இருக்கும் பாதிப்புகள் சீர் செய்யப்படுகிறது. சிகிச்சைக்குப் பின்னர் நாளடைவில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள அறிகுறிகள் எல்லாம் எந்த பக்க விளைவுகளும் இல்லாமல் மறைந்து விடும். இந்த சிகிச்சைக்கு மயக்க மருந்து பயன்படுத்த அவசியமில்லை.

இந்த சிகிச்சைக்கு பின்பு கால்களில் எந்த தழும்பும் காணப்படாது. இக்கருவிகள் மிக துல்லியமாக செயல்படுவதால் ரத்தக்குழாய்களுக்கு அருகில் உள்ள திசுக்களுக்கு எந்த வகையான பாதிப்பும் ஏற்படாது. இந்த சிகிச்சை செய்து கொள்பவர்கள் ஒரே நாளில் நடைமுறை வாழ்க்கைக்கு திரும்பி விட முடியும். எந்த வயதை சேர்ந்தவர்களாக இருந்தாலும், வேறு ஏதாவது நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் இதை மேற்கொள்ளலாம். இந்த சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு 98 சதவீதம் அதே ரத்தக்குழாயில் திரும்பி வருவதற்கான வாய்ப்புகள் இல்லை. இது ஒரு ஆபத்தற்ற, மிகவும் பலனளிக்கும் சிகிச்சை முறையாகும். இந்த சிகிச்சையினால் பக்க விளைவுகள் எதுவும் இல்லை.

இந்த சிகிச்சை முறை கே.எம்.சி.எச்., மருத்துவமனையில் கடந்த 3 வருடங்களாக மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு அதிகபட்சமாக 40 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. முதல்வர் காப்பீட்டு திட்டத்தின் மூலமும் இதை செய்து கொள்ளும் வசதியும் இம்மருத்துவமனையில் உள்ளதாக மருத்துவர் வெங்கடேஷ் கூறினார்.

மேலும் விபரங்களுக்கு, மருத்துவர் வெங்கடேசை 99409 44588, 0422 4324052 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

மின்னஞ்சல்:
drkasivenkatesh@
yahoo.co.in.